ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமானுஜாய நம :

# நம்பெருமாள் விஜயம்

(ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு)

(மலர்-72) May (2) / 2010



நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

'ஸ்ரீ அஹோபில தாஸன்' க.ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

காவேரி வர்த்ததாம் காலே காலே வர்ஷது வாஸவ:
ஸ்ரீரங்கநாதோ ஜயது ஸ்ரீரங்கஸ்ரீச்ச வர்த்ததாம்

ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு

## உட்பொதிவு

1. ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமம் (ஸ்வாமி பராசரபட்டர் பாஷ்யம்)……………….......3

2. ஸ்ரீபாஷ்யம் …………………………………………………………………......6

3. ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் ……………………………………………..……....9

4. ஸ்ரீவசனபூஷணம்……………………………………………………………...13

5. திருவாய்மொழி (ஈடு வ்யாக்யானம்)………..……………………………………...16

6. திருவிருத்தம்.......................……………………………………………………....19

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபராசரபட்டர் அருளிச் செய்த

# ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாம பாஷ்யம்

(பகுதி – 49)

## 281. மந்த்ர:

தன்னை த்யானம் செய்பவர்களைக் காப்பாற்றுபவன். நைருக்தர்கள் – தந் மந்தாரம் த்ராயதே இதி மந்த்ர: - தன்னை த்யானம் செய்பவர்களைக் காப்பாற்றுவது மந்த்ரம் - என்றனர். துஷ்டர்களை விரடுவது பற்றி ப்ராஹ்ம புராணத்தில் நாரதர் எம்பெருமானிடம் கேட்பது - ப்ராண ப்ரயாணே க: ஸ்மர்த்தும் சக்த: ஸ்யாத் மதுஸூதன: - மது என்ற அரக்கனை அழித்தவனே! இந்த உடலை விட்டு உயிர் பிரியும் நேரத்தில் உன்னை நினைக்கும் திறன் கொண்டவன் யார் - என்றார். இதற்குப் பதிலாக பகவான் கூறுவது - த்ருஷ்ணா தோய ஸமாகீர்ணாத் கோராத் ஸம்ஸார ஸாகராத் அபராத் பாரம் ஆப்நோதி யோமாம் ஸ்மரதி நித்யச: - ஸம்ஸாரம் என்ற கடலானது பேராசை என்னும் நீரால் நிரம்பியுள்ளது; எல்லை காண இயலாமல் பயங்கர ஆழமாக உள்ளது, என்னையே த்யானம் செய்து கொண்டிருக்கும் ஒருவன் அந்தக் கடலைத் தாண்டுகிறான் - என்றான். இது போன்று வராஹ சரம ச்லோகம் பின்வருமாறு கூறுகிறது:

ஸ்திதே மநஸி ஸுஸ்வஸ்தே கோராத் ஸம்ஸார ஸாகராத்
தாது ஸாம்யே ஸ்திதே ஸ்மர்த்தோ விச்வரூபம் ச மாம் அஜ:
ததஸ்தம் ப்ரியமாணம் து காஷ்டாபாஷாண ஸந்நிபம்
அஹம் ஸ்மராமி மத்பக்தம் நயாமி பரமாம் கதிம்

இதன் பொருள் – தனது உடலும் மனமும் ஸ்திரமாக உள்ளபோது என்னை ஒருவன் நினைத்தபடி இருக்கட்டும், அதன் பின்னர் அவன் இறந்தபோது கட்டை போன்றும் கல் போன்றும் அசையாமல் உள்ளபோது, என்னை அவன்

நினைக்கவேண்டிய அவசியம் இல்லை, அவனுக்குத் துணையாக நான் நின்று அவனை வழி நடத்துவேன் – என்பதாகும்.

## 282. சந்த்ராம்சு:

சந்த்ரன் போன்று குளிர்ந்த கிரணங்கள் உள்ளவன். கீழே உள்ள வரிகள் காண்க:

- உணாதி சூத்திரம் – சதி ஆஹ்லா தநே – மகிழ்ச்சி என்னும் பொருளை அளிக்கவல்ல "சதி" என்பதில் இருந்து "சந்த்ரன்" என்ற பதம் உண்டானது

- இராமாயணம் ஆரண்ய காண்டம் – தே தம் ஸோமம் இவ உத்யந்தம் த்ருஷ்டவா வை தர்மசாரிண: - இருளைப் போக்க உதிக்கும் சந்திரன் போன்று அங்கிருந்த முனிவர்கள் இராமனைக் கண்டனர்.

## 283. பாஸ்கர த்யுதி

சூரியனின் தேஜஸ் போன்ற ஒளி கொண்டவன். தனது சத்ருக்கள் அனைவரையும் வெல்லக்கூடிய பெருமையும் தேஜஸ்ஸும் கொண்டவன்.

- கீதை (11-36) - ரக்ஷாம்ஸி பீதாநி திசோ த்ரவந்தி - உன்னைக் காணப் பயந்தவர்களாக அரக்கர்கள் அனைத்து திசைகளிலும் ஓடுகின்றனர்.

- இராமாயணம் ஸுந்தரகாண்டம் – சர ஜால அம்சுமான் சூர: கபே ராம திவாகர: சத்ரு ரக்ஷோமயம் தாயம் உபசோஷம் நயிஷ்யதி - அனுமனே! இராமன் எனப்படும் சூரியன் மிகவும் திறன் கொண்ட சூரன் ஆவான். கிரணங்கள் கொண்ட சூரியன் தண்ணீரை வற்ற வைப்பது போன்று, தனது கிரணங்கள் போன்ற கூர்மையான அம்புகளால் இராமன் அரக்கர்களை இருந்த சுவடு இல்லாமல் அழிக்கிறான்.

- மஹாபாரதம் சபாபர்வம் – எவம் ஏஷ: அஸுராணாம் ச ஸுராணாம் ச ஏவ ஸர்வச: பயாபயகர: க்ருஷ்ண: ஸர்வலோகேச்வரே ப்ரபு: - ஈச்வரனாகவும்

சக்தியுடன் கூடிய ப்ரபுவாகவும் உள்ள க்ருஷ்ணன் துன்பம் அளிக்கின்ற அசுரர்களுக்கு அச்சத்தை ஏற்படுத்துகிறான். தன்னிடம் அன்பு கொண்ட தேவர்களுக்கு அருள் புரிந்து அபயம் அளிக்கிறான்.

அழகியமணவாளன் திருவடிகளே சரணம்
ஸ்வாமி பராசரபட்டர் திருவடிகளே தஞ்சம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

பகவத் ராமானுஜர் அருளிச் செய்த

# ஸ்ரீபாஷ்யம்

(பகுதி – 72)

4-4-18 ப்ரத்யக்ஷோபதேசாத் இதி சேத் ந அதிகாரிக மண்டல ஸ்தோக்தே:

**பொருள்** - ச்ருதியில் கூறப்பட்டதால் தள்ள இயலாது என்பது சரியல்ல, அந்த வரிகளில் நான்முகன் போன்றவர்களின் உலகில் உள்ள போகங்கள் கூறப்பட்டதால் ஆகும்.

**பூர்வபக்ஷம்** –கீழே உள்ள ச்ருதி வரிகள் காண்க:

- சாந்தோக்ய உபநிஷத் (7-25-2) ஸ ஸ்வராட் பவதி தஸ்ய ஸர்வேஷு லோகேஷு காமசாரோ பவதி - முக்தாத்மா கர்மத்தின் வசப்பட்டவன் அல்லாதபடி ஆகிறான்; அவனுக்கு அவன் விருப்பத்தின்படி எங்கும் ஸஞ்சாரம் ஏற்படுகிறது.

- தைத்திரீயம் (3-10-5) – இமாந் லோகாந் காமாந்நீ காமரூப்யநுஸஞ்சரந் – விரும்பிய லோகங்களில் விரும்பிய உருவம் எடுத்தபடி முக்தாத்மா ஸஞ்சரிக்கிறான்.

இப்படியாக வேதவாக்கியங்கள் மூலமாகவே முக்தனுக்கு ஜகத்வ்யாபாரம் கூறப்பட்டது. ஆக இத்தகைய ஜகத்வ்யாபாரம் என்பது முக்தனின் ஐச்வர்யம் அல்ல என்று கூற இயலாது.

**ஸித்தாந்தம் –** அப்படியல்ல. அந்த வரிகளில் கூறப்பட்டது என்னவென்றால், இந்த உலகைப் படைக்கும்படி ஸர்வேச்வரனால் நியமிக்கப்பட்ட நான்முகன் போன்றவர்களின் உலகங்களில் உள்ள செல்வங்கள், முக்தாத்மாவிற்கும்

அனுபவிக்கக் கிட்டும் என்பதே ஆகும். இவை கர்மத்திற்குக் கட்டுப்படாத முக்தாத்மாவிற்கும் கிட்டும் என்பதை சாந்தோக்ய உபநிஷத் (7-25-3) - தஸ்ய ஸர்வேஷு லோகேஷு காமசாரோ பவதி - என்றது. கர்மத்தின் தொடர்பு நீங்கிய காரணத்தால் தடைபடாத ஞானம் கொண்ட முக்தனுக்கு, அனைத்து லோகங்களும் எம்பெருமானின் செல்வங்கள் என்பதால், அனைத்தும் அனுபவிக்கக் கிட்டுகிறது என்று கருத்து. ஆகவே நான்முகன் போன்ற அதிகாரிகளின் உலகங்களில் உள்ள செல்வங்களை முக்தாத்மா அனுபவித்தபடி உள்ளான் என்றும், ஜகத் வ்யாபாரம் போன்றவை இல்லாமல் இருத்தல் என்பதே இவனது ஐச்வர்யம் என்றும் தெளிவாகிறது.

**பூர்வபக்ஷம்** – மாற்றங்களுடன் கூடிய இந்த உலகங்களை முக்தன் அனுபவிக்கிறான் என்று கூறினால், இந்தகைய உலகங்களை அனுபவிக்கின்ற ஸம்ஸார ஜீவனின் செல்வங்கள் போன்று முக்தனின் செல்வங்களும் அற்பமானவை, முடிவுள்ளவை என்றாகிவிடுமே! (இதற்கான பதிலை அடுத்த சூத்திரம் அளிக்கிறது)

4-4-19 விகாராவர்த்தி ச ததா ஹி ஸித்திமாஹ

**பொருள்** - மாற்றங்கள் இல்லாத ப்ரஹ்மத்தையும் அனுபவிக்கிறான். இப்படியாகவே ச்ருதி கூறுகிறது.

**ஸித்தாந்தம்** (கடந்த சூத்திரத்தின் இறுதியில் உள்ள பூர்வபக்ஷத்திற்கு உரியது) - எந்தவிதமான மாற்றங்கள் அற்றதும், நித்யவிபுதி மற்றும் லீலாவிபூதி என்னும் இரண்டு செல்வத்துடன் கூடியதும், அனைத்துவிதமான கல்யாணகுணங்களுடன் கூடியதும் ஆகிய பரப்ரஹ்மத்தையே முக்தன் அனுபவிக்கிறான். இப்படியாக அனுபவிக்கும்போது இந்த உலகங்கள் அனைத்தையும் அத்தகைய ப்ரஹ்மத்தினுடைய செல்வங்களில் ஒன்றாகவே முக்தன் அனுபவிக்கிறான். மாற்றங்கள் அற்ற ப்ரஹ்மத்தை அனுபவித்தபடி முக்தாத்மா நிலையாக உள்ளதைக் கீழே உள்ள வரிகளில் காணலாம்:

- தைத்திரீயம் (2-7) யதா ஹி ஏவ ஏஷ ஏதஸ்மிந் அத்ருச்யே அநாத்ம்யே அநிக்ருதே அநிலயநே அபயம் ப்ரதிஷ்டாம் விந்ததே அத ஸ: அபயம் கதோ பவதி - கண்களால் காண இயலாததும், சரீரம் இல்லாததும், ஜாதி மற்றும் குணம் உள்ளிட்ட எவற்றாலும் கூற இயலாததும், ஆதாரமற்றதும் ஆகிய

பரமாத்மாவிடம் பயம் இல்லாமல் இருப்பதற்காக எப்போது உபாஸகன் த்யானம் அடைகிறானோ அப்போது அவன் பயம் அற்றவன் ஆகிறான்.

- தைத்திரீயம் (2-7) ரஸோ வை ஸ: ரஸம் ஹி ஏவ அயம் லப்த்வா ஆநந்தீ பவதி – பரமாத்மா ரஸமாகவே உள்ளான், அப்படிப்பட்ட அவனை அடைந்து ஜீவனும் ஆனந்தம் அடைகிறான்.

மேலும் பரமாத்மாவின் ஐச்வர்யமாகிய உலகங்கள் அவனிடமே ஒடுங்கியுள்ளன என்பதைக் கட உபநிஷத் (5-8) – தஸ்மிந் லோகா: ச்ரிதா: ஸர்வே தது நாத்யேதி கச்சந – அந்தப் பரம்பொருளிடமே அனைத்து லோகங்களும் ஒடுங்கி உள்ளன, எதுவும் அதனை விட்டுத் தனியே விலகுவதில்லை - என்றது. ஆகவே சாந்தோக்ய உபநிஷத் (7-25-2) – ஸர்வேஷு லோகேஷு காமசார: - அனைத்து லோகங்களிலும் தனது விருப்பத்தின்படி ஸஞ்சரிக்கிறான் - என்று முக்தனுக்கு அனைத்து உலகங்களிலும் ஸஞ்சாரத்தைக் கூறுவதன் மூலம், அனைத்து செல்வங்களுடன் கூடிய ப்ரஹ்மத்தை அனுபவிக்கும்போது அந்த உலகங்களில் உள்ள அனைத்தையும் அனுபவிப்பதாகவே கூறப்பட்டது. இதனை விடுத்து ஜகத்வ்யாபாரம் போன்ற எதுவும் அங்கு கூறப்படவில்லை.

தென்னரங்கன் திருவடிகளே சரணம்
தென்னரங்கன் செல்வம் முற்றும் திருத்தி வைத்த இராமாநுசன் திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீவேதாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த

# ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்

(பகுதி – 72)

**மூலம்** – ஜ்ஞாநவானானவன் ப்ராதிகூல்யத்திலே புத்திபூர்வகமாகப் ப்ரவ்ருத்தனானாலும் புந:ப்ரபத்தியாலே ஸர்வேச்வரன் க்ஷமிக்குமென்னுமிடம் ஸ்ரீபதரிகாச்ரமத்திலே க்ரோதாந்தனாய் தர்மாத்மஜனான பகவானோடே எதிரம்பு கோத்த ருத்ரனை ப்ரஹ்மா தெளிவித்து விலக்க, அவனும்

ப்ரஸாதயாமாஸ பவோ தேவம் நாராயணம் ப்ரபும்
சரணம் ச ஜகாமாத்யம் வரேண்ய வரதம் ஹரிம்

என்கிறபடியே ப்ரஸாதமான சரணாகதியைப் பண்ண,

ததோ அத வரதோ தேவோ ஜிதக்ரோதோ ஜிதேந்த்ரிய:
ப்ரீதிமாநபவத் தத்ர ருத்ரேண ஸஹ ஸங்கத:

என்கிறபடியே ஸர்வேச்வரன் ப்ரஸந்நனாய் ருத்ரனை அங்கீகரித்தானென்கையாலே ஸித்தம்.

**விளக்கம்** – தத்வ ஞானம் கொண்ட ஒருவன் தனது அறிவுக்குத் தெரிந்தே எம்பெருமானுக்கு வெறுப்பு உண்டாகும்படியான செயலில் ஈடுபடக்கூடும். அந்தச் செயலுக்காக வருந்தி அவன் ப்ராயச்சித்த ப்ரபத்தி செய்தான் என்றால், அவனை எம்பெருமான் மன்னிக்கிறான். இதனை ஸ்ரீபதரிகாச்ரமத்தில் நடந்த நிகழ்வு மூலம் அறியலாம். தர்மத்தின் புத்ரனாக எம்பெருமான் ஸ்ரீபதரிகாச்ரமத்தில் அவதரித்தபோது, அவனுக்கு எதிராக அம்பைக் குறி பார்த்த ருத்ரனை நான்முகன் தடுத்து, ருத்ரனுக்கு புத்தி புகட்டினான். அதன் பின்னர் தெளிந்த ருத்ரன் மஹாபாரதம் சாந்திபர்வம் (352-64) - ப்ரஸாதயாமாஸ பவோ தேவம் நாராயணம் ப்ரபும் சரணம் ச ஜகாமாத்யம் வரேண்ய வரதம் ஹரிம் – அதன் பின்னர் ப்ரபுவான நாராயணனின் கோபம் தீர்ந்து அவன் மகிழும்படியாக ருத்ரன் சரணம் புகுந்தான்,

அனைத்திற்கும் காரணமானவனும் வரங்களை அளிப்பவனும் ஆகிய அந்த ஸ்ரீஹரியிடம் சரணம் புகுந்தான் – என்பதற்கு ஏற்ப எம்பெருமானிடம் சரணாகதி அடைந்தான். அப்போது மஹாபாரதம் சாந்திபர்வம் (352-65) - ததோ அத வரதோ தேவோ ஜிதக்ரோதோ ஜிதேந்த்ரிய: ப்ரீதிமாநபவத் தத்ர ருத்ரேண ஸஹ ஸங்கத: - இந்த்ரியங்களை வென்றவனும் வரங்களை அளிப்பவனும் ஆகிய எம்பெருமான் தனது கோபம் நீங்கப்பெற்று ருத்ரனுடன் ப்ரியமாக இருந்தான் - என்பதற்கு ஏற்ப எம்பெருமான் மகிழ்வுடன் ருத்ரனின் சரணாகதியை ஏற்றான்.

**மூலம்** – தான் குற்றவாளனாகவுமாம் தான் இப்போது குற்றம் செய்யாதேயிருக்க ஜந்மாந்தர துஷ்க்ருதத்தாலேயாகவுமாம் சில பாகவதர் தன்னை வெறுக்கில் ஏதேனுமொரு விரகாலே அவர்களை க்ஷமை கொள்ளுகிற முகத்தாலே ஈச்வரனை க்ஷமை கொள்ள வேணுமென்னுமிடம்

ருக்ஷாக்ஷராணி ச்ருண்வந் வை ததா பாகவதேரிதாந்
ப்ரணாமபூர்வகம் க்ஷாந்த்யா யோ வதேத்வைஷ்ணவோ ஹி ஸ:

என்று ஸ்ரீவைஷ்ணவ லக்ஷணம் சொல்லுகிற ப்ரமாணத்திலே ப்ரஸித்தம். இங்ஙன் செய்யாதபோது

யே ப்ராஹ்மணாஸ்தே அஹமஸம்சயம் ந்ருப
தேஷ்வர்ச்சிதேஷ்வர்ச்சிதோ அஹம் யதாவத்
தேஷ்வேவ துஷ்டேஷ்வஹமேவ துஷ்டோ வைரம்
ச தைர்யஸ்ய மமாபி வைரம்

க்நந்தம் சபந்தம் புருஷம் வதந்தம் யோ ப்ராஹ்மணம் ந ப்ரணமேத்யதா அஹம்
ஸ பாபக்ருத் ப்ரஹ்மதவாக்நிதக்தோ வக்யச்ச தண்டயச்ச ந சாஸ்மதீய:

என்கிறபடியே பகவதபிமாந பாஹ்யனுமாய், வைஷ்ணவப்ரக்ருதியாயிருக்கிற தனக்கு ஸ்வரூபமென்னலாம்படி அந்தரங்கமான பாகவதசேஷத்தையும் ஸ்வபாவமாய் நிற்கிற சாம தமாதிகளையும் இழந்தானாம். இவற்றை இழக்கைதானே இவனுக்கு வதமும் தண்டமும். பகவதபிமாந பாஹ்யதையின் கொடுமையை “அளியன் நம் பையல் என்னார் அம்மவோ கொடியவாறே” என்று பாகவத சேஷத்வமே தமக்கு நிரூபகமாக ருசித்த தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச்செய்தார்.

**விளக்கம்** – ஒருவன் இந்தப் பிறவியில் பாகவத அபசாரம் செய்யக்கூடும்; அல்லது இந்தப் பிறவியில் ஒருவன் பாகவத அபசாரம் செய்யாதபோதிலும் அவன் முற்பிறவிகளில் செய்த தவறுகளின் காரணமாக அவனை ஒரு சில பாகவதர்கள்

வெறுக்கக்கூடும். இப்படி உள்ளபோது அவன் ஏதோ ஒரு முறையில் அவர்கள் தன்னை மன்னிக்கும்படிச் செய்து, இதன் மூலம் ஈச்வரனும் தன்னை மன்னிக்கும்படிச் செய்யவேண்டும். இதனை ஸ்ரீவைஷ்ணவ லக்ஷணம் குறித்து விளக்கும் ப்ரமாணம் மூலம் அறியலாம். அந்த ப்ரமாணம் லைங்கபுராணம் உத்தரபாகம் (4-9) - ருக்ஷாக்ஷராணி ச்ருண்வந் வை ததா பாகவதேரிதாந் ப்ரணாமபூர்வகம் க்ஷாந்த்யா யோ வதேத்வைஷ்ணவோ ஹி ஸ: - ஒரு பாகவதன் தன்னைக் குறித்துக் கடுமையாகப் பேசினாலும், அவனை வணங்கியபடி நின்று, அவனது கோபத்திற்குத் தான் இலக்கானதற்காக மன்னிப்பு கேட்பவனே உண்மையான ஸ்ரீவைஷ்ணவன் ஆவான் – என்பதாகும். இப்படிச் செய்யவில்லையெனில் – அவன் பகவானின் கடாக்ஷத்தையும் கருணையையும் இழக்கிறான், எம்பெருமானுக்கு மிகவும் நெருக்கமான அடிமையாக இருத்தல் என்பதாகிய தனது வைஷ்ணவ ஸ்வரூபத்தை இழக்கிறான், புலன்களை வசப்படுத்தும் தன்மை மற்றும் பொறுமை ஆகியவற்றை இழக்கிறான். கீழே உள்ள வரிகள் காண்க:

- விஷ்ணுதர்மம் (52-20) - யே ப்ராஹ்மணாஸ்தே அஹமஸம்சயம் ந்ருப தேஷ்வர்ச்சிதேஷ்வர்ச்சிதோ அஹம் யதாவத் தேஷ்வேவ துஷ்டேஷ்வஹமேவ துஷ்டோ வைரம் ச தைர்யஸ்ய மமாபி வைரம் – பாகவதர்கள் அனைவரும் எனது வடிவமே ஆவர். அரசனே! அவர்களை பூஜித்தால் என்னைப் பூஜிப்பதே ஆகும். அவர்கள் மகிழ்வு கொண்டால் நானும் மகிழ்கிறேன். அவர்களை வெறுப்பவன் என்னையும் வெறுப்பவன் ஆகிறான்.

- இதிஹாஸ ஸமுச்சயம் - க்நந்தம் சபந்தம் புருஷம் வதந்தம் யோ ப்ராஹ்மணம் ந ப்ரணமேத்யதா அஹம் ஸ பாபக்ருத் ப்ரஹ்மதவாக்நிதக்தோ வக்யச்ச தண்டயச்ச ந சாஸ்மதீய: - ஓர் அந்தணன் தன்னை அடித்தாலும், சாபம் அளித்தாலும், தகாத சொற்களைக் கூறினாலும் அந்த அந்தணனை ஒருவன், நான் (எம்பெருமான்) ப்ருகு முனிவரை வணங்கியது போன்று வணங்கவேண்டும். இவ்விதம் செய்யாதவன் பாவம் செய்தவன் ஆகிறான். அவன் அந்தணனின் கோபம் என்னும் காட்டுத்தீயால் எரிக்கப்பட்டவன் ஆகிறான், அவன் கொல்லத்தக்கவன், தண்டனை பெறுவதற்கு ஏற்றவன், என்னைச் சேராதவன் ஆகிறான்.

மேலே கூறியபடி "எம்பெருமானுக்கு மிகவும் நெருக்கமான அடிமையாக இருத்தல் என்பதாகிய தனது வைஷ்ணவ ஸ்வரூபத்தை இழத்தல்" போன்றவை ஓர் உண்மையான வைஷ்ணவனுக்கு மரணதண்டனை போன்றே இருப்பதாகும். இப்படியாக தான் அந்த அரங்கனுக்கே அடிமைப்பட்டு இருப்பது குறித்தும், திருவரங்கன் தன்னைக் கண்டுகொள்ளாமல் இருப்பது குறித்தும் கூறும்

தொண்டரடிப்பொடியாழ்வார் திருமாலையில் (37) - அளியன் நம் பையல் என்னார் அம்மவோ கொடியவாறே – என்று அவனது பார்வை தன் மீது படாமல் போனால் உண்டாகும் துக்கத்தை வெளிப்படுத்துவது காண்க.

தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீரங்கநாச்சியார் ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்வாமி பிள்ளை லோகாசார்யர் அருளிச் செய்த

# ஸ்ரீவசனபூஷணம்

இதற்கு ஸ்வாமி மணவாள மாமுனிகள் அருளிச் செய்த வ்யாக்யானம்
(பகுதி – 28)

54. இது தன்னைப் பார்த்தால் பிதாவுக்குப் புத்ரனெழுத்து வாங்குமாபோலேயிருப்பதொன்று.

**அவதாரிகை** - இப்ப்ரபத்தி தனக்கு (தர்மபுத்ராதிகளும்) என்று தொடங்கி கீழுக்தரானவதிகாரிகள் பக்கலிலே ஸாதநதயா அநுஷ்டாநம் காண்கையாலும், கர்ம ஜ்ஞாந பக்தி ப்ரபத்திகளென்று உபாயங்களோடே ஸஹபடிதமாய்ப் போருகையாலும் "யத் யேந காமகாமேந நஸாத்யம் ஸாதநாந்தரை: முமுக்ஷுணா யத் ஸாங்க்யேந யோகேந நச பக்தித: ப்ராப்யதே பரமம் தாம யதோ நாவர்த்ததே புந: தேந தேநாப்யதே தத்தந்ந்யா ஸேநைவ மஹாமுநே பரமாத்மாச தேநைவ ஸாத்யதே புருஷோத்தம:" என்றும், “இதம் சரணமஜ்ஞாநாம்” என்றும் இப்படியே சாஸ்த்ரங்களித்தை ஸாதநாமாகச் சொல்லுகையாலும் உபாயத்வ ப்ரதிபத்தி யோக்யதை யுண்டாகையாலே, அத்தை வ்யாவர்த்திக்கைக்காக அதுக்குடலான பலவற்றையுமருளிச் செய்கிறார் மேல்; அதில் ப்ரதமத்திலே, இப்ப்ரபத்தியை யுபாயமாகக் கொண்டால் வருமவத்யத்தை தர்சிப்பிக்கிறார் "இது தன்னை" என்று தொடங்கி.

**விளக்கம்** – கீழே உள்ள பல காரணங்களால் ப்ரபத்தி என்பதை உபாயமாக எண்ணி விடக்கூடிய நிலை ஏற்படும்:

- சூர்ணை 32ல் கூறப்பட்ட தர்மபுத்திரர் முதலான அதிகாரிகளிடம் ப்ரபத்தியைச் சாதனமாகக் கொண்ட செயல்பாடு காணப்படுகிறது.
- கர்மம், ஞானம், பக்தி, ப்ரபத்தி என்று ப்ரபத்தியானது மற்ற உபாயங்களுடன் சேர்த்துப் பேசப்படுகிறது.

- லக்ஷ்மீதந்திரம் - யத் யேந காமகாமேந நஸாத்யம் ஸாதநாந்தரை: முமுக்ஷுணா யத் ஸாங்க்யேந யோகேந நச பக்தித: ப்ராப்யதே பரமம் தாம யதோ நாவர்த்ததே புந: தேந தேநாப்யதே தத்தந்ந்யா ஸேநைவ மஹாமுநே பரமாத்மாச தேநைவ ஸாத்யதே புருஷோத்தம: – ஐச்வர்யத்தை விரும்பும் யாரால் எந்த ஓர் ஐச்வர்யம் மற்ற சாதனங்களால் பெற இயலாமல் உள்ளதோ அது ப்ரபத்தியினால் பெறத் தக்கது; எந்த ஒரு முமுக்ஷுவால் மீண்டும் திரும்புதல் இல்லாமை என்ற இடமான பரமபதமானது கர்மயோகம் போன்றவற்றால் பெற இயலாமல் உள்ளதோ அந்த இடம் ப்ரபத்தியினால் அடையப்படுகிறது; கைவல்யத்தை விட உயர்ந்த பரமாத்ம அனுபவம் ப்ரபத்தியில் கிட்டுகிறது.

- லக்ஷ்மீ தந்திரம் – இதம் சரணமஜ்ஞாநாம் – அறிவற்றவர்களுக்கும் இந்த ப்ரபத்தியே உபாயம்

ஆக மேலே உள்ள பல வரிகளின் மூலம் ப்ரபத்தியை ஓர் உபாயமாக எண்ணிவிடக்கூடிய வாய்ப்பு உள்ளது. இந்த எண்ணத்தை நீக்கும் பொருட்டு மற்ற பலவற்றையும் விளக்குகிறார். இப்படியாக விளக்கவுள்ள பலவற்றில், முதலில் ப்ரபத்தியை உபயமாக எண்ணினால் வரும் குற்றத்தை இந்தச் சூர்ணையில் அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் –** ”இது தன்னைப் பார்த்தால்” என்றது இச்சேதனீச்வர விஷயத்தில் பண்ணுமிப்ப்ரபத்தி தன்னையுபாயமென்னப் பார்த்தாலென்றபடி. ஈச்வரன் தன்னை ரக்ஷிக்கைக்கு ஹேதுவாக விச்சேதநன் பண்ணும் ப்ரபத்தி தன்னை நிரூபித்தால் என்றிங்ஙனே அநத்யாஹாரேண யோஜிக்கவுமாம்; அப்போதும் அர்த்த மொக்குமிறே.

**விளக்கம் –** “இது தன்னைப் பார்த்தால்” – சேதனர்கள் எப்பெருமானிடம் செய்கின்ற ப்ரபத்தியை ஓர் உபாயம் என்று கூறினால் – என்று பொருள். மேலும், எம்பெருமான் தங்களைக் காப்பாற்றுவதற்கான உறுப்பாகவே சேதனர்கள் இந்த ப்ரபத்தியைக் செய்கின்றனர் என்று ப்ரபத்தியை நிரூபிக்கும்போது “உபாயம்” என்ற சொல்லை எடுத்தாள வேண்டிய அவசியம் இல்லாமலேயே கூற இயலும். அப்போதும் இதே கருத்து வெளிப்படும்.

**வ்யாக்யானம் –** "பிதாவுக்குப் புத்ரனெழுத்து வாங்குமாப்போலே யிருப்பதொன்று" என்றது உத்பாதகனாகையாலே ஹிதைஷியாய் தானறியாத தசையிலும் தன்னை ரக்ஷித்துக் கொண்டுபோரும் தமப்பனுக்கு, புத்ரனானவன், தானறிந்த தசையிலே என்னை நீ ரக்ஷிக்கவேணும் என்றெழுத்து வாங்கினால், இரண்டு தலைக்குமுண்டான உறவுக்குக் கொத்தையாமாப்போலே, ஸத்தாகாரணபூதனாய் ஸர்வதசையிலும் ரக்ஷகனாய்க் கொண்டு போருகிற அகாரவாச்யனான ஸர்வேச்வரனுக்கும் மகாரவாச்யனான விவனுக்கு முண்டான ஸம்பந்தத்துக் கவத்யகர மென்றபடி. "எழுத்து வாங்குகையாவது" ரக்ஷகன் பேரைத் தன் மார்பிலே யெழுதிக் கொள்ளுகை.

**விளக்கம் -** "பிதாவுக்குப் புத்ரனெழுத்து வாங்குமாப்போலே யிருப்பதொன்று" – தன்னை இந்த உலகத்தில் உண்டாக்கியவன் என்பதால் தனது நலத்தை எப்போதும் எண்ணியவனக, தான் ஏதும் அறியாத பருவத்தில் இருந்தபோதிலும், ஒரு மகன் தந்தையிடம் "என்னைப் நீ பாதுகாக்க வேண்டும்" என்று வளர்ந்த பிறகு எழுதி வாங்கிக் கொள்வானோ? அப்படி எழுதி வாங்கிக் கொண்டால் அந்த இருவருக்கும் இடையே உள்ள உறவு என்பது கொச்சையாகிவிடாதோ? இது போன்று நாம் அனைவரும் "இருக்கிறோம்" என்று கூறும்படியாக நம்மை வைப்பதற்குக் காரணமாக உள்ளவனும், அனைத்து நிலையிலும் நமக்குப் பாதுகாப்பாக உள்ளவனும், ப்ரணவத்தில் உள்ள "அ" என்ற எழுத்தின் பொருளாக உள்ளவனும் ஆகிய எம்பெருமானை அடையும் உபாயமாக ப்ரணவத்தில் உள்ள "ம" என்ற எழுத்தின் பொருளான ஜீவன், ப்ரபத்தியைக் கைக்கொண்டால் (உபாயம் என்று கைக்கொண்டால்) இந்த இருவருக்கும் இடையே உள்ள ஸம்பந்தத்திற்கு (ரக்ஷகன், ரக்ஷிக்கப்படுபவன்) குற்றமே உண்டாகும். "எழுத்து வாங்குகை" என்றால் தனக்குத் தொடர்பு இல்லாமல் நம்மைக் காப்பாற்றுபவன் பெயரை, தான் தொடர்பு இல்லாமல் காப்பாற்றப்பட்டதால் மார்பில் எழுதிக்கொள்ளுதல்.

ஸ்வாமி பிள்ளை லோகாசார்யர் திருவடிகளே சரணம்
ஸ்வாமி மணவாள மாமுனிகள் திருவடிகளே சரணம்

.......தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ப்ரபந்நஜந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த

# திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி வடக்குத் திருவீதிப் பிள்ளை அருளிச் செய்த
முப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு வ்யாக்யானம்
மூலமும், எளிய தமிழ்நடையும்
(பகுதி – 38)

1-2-5 அற்றது பற்றெனி லுற்றது வீடுயிர்
செற்றது மன்னுறி லற்றிறை பற்றே.

**பொருள்** – உலகவிஷயங்களில் உள்ள ஆசை நீங்கியவுடன் உயிரானது மோக்ஷத்தைப் பெற்றதாகும் (கைவல்யம்). அத்தகைய ஆத்மப்ராப்தி என்னும் கைவல்ய மோக்ஷத்தை நீக்கி, நிலையாக நிற்கும்படியான பகவத் விஷயத்தைக் கிட்டுவதற்காக, மற்றவற்றைத் தவிர்த்து அவனையே பற்றுவாயாக.

**அவதாரிகை** - பற்றுமிடத்தில் வரும் அந்தராய பரிஹாரத்தையும் அருளிச்செய்கிறார்; இந்த்ரபதத்தைக் கோலுமவன் இவ்வருகுண்டான ஐச்வர்யத்தைக் கோலான்; ப்ரஹ்மபதத்தை ஆசைப்படுமவன் இவ்வருகுண்டான இந்த்ரபதத்திற் கண்வையான்; ஆத்மாநுபவத்தை ஆசைப்படுமவன் ஐச்வர்யாதிகளிற் கண்வையான்; ஸமஸ்த கல்யாண குணாத்மகனாய் நித்யமங்கள விக்ரஹ யுக்தனாயிருக்குமவனைப் பற்றுமவன் இவை இத்தனையிலும் காண்வையான். ஆக, இங்ஙன் வரும் அந்தராய பரிஹாரத்தை அருளிச் செய்கிறார்.

**விளக்கம்** – அவனைப் பற்றும்போது ஏற்படுகின்ற தடைகளை நீக்கும் தன்மையை அருளிச்செய்கிறார். இங்கு தடை என்பது கைவல்ய அனுபவம் (ஆத்ம அனுபவம்) ஆகும். அதனைத் தடை என்று ஏன் கூற வேண்டும்? இந்த்ரபதவியை அடைய

எண்ணுபவன் வேறு தாழ்ந்த ஐச்வர்யங்களை விரும்பமாட்டான் ; ப்ரஹ்மபதத்தை அடைய எண்ணுபவன் இந்திரபதவியில் கண் வைக்கமாட்டான்; ஆத்மஅனுபவத்தில் ஆசை கொண்டவன் ஐச்வர்யத்தில் கண் வைக்கமாட்டான். அனைத்து திருக்கல்யாண குணங்களும் கொண்டவனும், திவ்யமான மங்களவிக்ரஹத்தை உடையவனும் ஆகிய எம்பெருமானைப் பற்றுபவன் மேலே உள்ள எதிலும் ஈடுபடமாட்டான். ஆக இங்கு தடையாக உள்ளதை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் -** (அற்றது பற்றெனில்) ப்ரக்ருதி ப்ராக்ருதங்களிலுண்டான பற்று அற்றது என்னுமளவிலே. (உற்றது வீடுயிர்) ஆத்மா மோக்ஷத்தை ப்ராபித்தது. விலக்ஷண ஜ்ஞாநத்தையும் ஸ்வரூபத்தையுமுடைய வஸ்துவுக்குத் திரோதாநத்தைப் பண்ணுகிற அசித் ஸம்ஸர்க்கமிறே; யோகாப்யாஸத்தாலே கழிந்தவாறே ஸ்வரூபம் ப்ரகாஸிக்கும்; அது நித்யமாய், ஜ்ஞாநாநந்த லக்ஷணமாயிருக்கையாலே "இது தன்னையே அநுபவிக்க அமையாதோ?" என்று தன்பக்கலிலே கால் தாழப்பண்ணும். (செற்றது) அத்தைச் செற்றது - அத்தை முகம் சிதறப் புடைத்து. (மன்னுறில்) மன்னவுறில். தன்னைப் பற்றினால் "இன்னமும் அதுக்கு அவ்வருகே ஒரு அநுபவமுண்டு" என்றிருக்க வேண்டாதபடியான நிலை புருஷார்த்தத்தைப் பற்றப் பார்க்கில். (அற்றிறை பற்றே) ஆச்ரயண காலத்திலே அவனுக்கு என்று அத்யவஸித்து, சேஷியான அவனைப் பற்றப் பாருங்கோள். அன்றியே, விபக்தியை மாறாடி, இறையைப்பற்றி இத்தை அறப் பார் என்னுதல். "மாற்பால் மனஞ்சுழிப்ப மங்கையர் தோள் கைவிட்டு" என்னுமாபோலே.

**விளக்கம்** – (அற்றது பற்றெனில்) – உடலும், உடல் தொடர்புடைய பொருள்களும் ஆகிய இவற்றில் உண்டான ஆசை நீங்கியது என்னும் நிலையில். (உற்றது வீடுயிர்) – ஆத்மா மோக்ஷத்தை அடைந்தது (கைவல்யத்தில் இச்சை பிறக்கும் என்று கருத்து). வேறுபட்ட ஞானம் மற்றும் ஸ்வரூபம் கொண்ட ஆத்மாவுக்கு உடல் தொடர்பு காரணமாக ஞானமறைவு உண்டாகிறது. யோகம் மூலம் அந்த மறைவு நீங்கியவுடன் ஸ்வரூபம் புலப்படும். அது நித்யமான, ஞானமயமான, ஆனந்தமயமான தன்மை கொண்டதால் "இந்த ஆத்மா தன்னையே அனுபவிக்க அமையாதோ" என்று தன்பக்கம் அகப்படுத்திக் கொள்ளும் (அதாவது கைவல்ய அனுபவத்தில் சிக்கிக் கொள்ளும்). செற்றது – அத்தகைய ஆத்மானுபவம் தலைதூக்க இயலாதபடி செய்து. (மன்னுறில்) – எம்பெருமானைப் பற்றினால், "இன்னமும் அதற்கு மேல் ஓர் புருஷார்த்தம் உண்டு" என்று கூற முடியாதபடி உள்ள நிலையான புருஷார்த்தத்தைப் பற்ற ஆசை மேலிடும்போது. (அற்றிறை பற்றே) – அவனை அடைகின்ற காலத்திலே அவனுக்கு என்று உறுதி செய்து, எஜமானனாக

அவனையே பற்றியபடி இருக்க முயலவேண்டும். இதற்கு மூன்றாம்திருவந்தாதி (14) - மாற்பால் மனஞ்சுழிப்ப மங்கையர் தோள் கைவிட்டு – என்னும்படி எம்பெருமானைப் பற்றி மற்றவற்றை அறுக்கவேண்டும் எனலாம்.

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ப்ரபந்நஜந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த

# திருவிருத்தம்

இதற்கு ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை மற்றும் நம்பிள்ளை அருளிச் செய்த வ்யாக்யானங்கள்

மூலமும், எளிய தமிழ்நடையும்

(பகுதி – 1)

## தனியன்

கரு விருத்தக் குழி நீத்தபின் காமக் கடுங்குழி வீழ்ந்து
ஒரு விருத்தம் புக்கு உழலுறுவீர் உயிரின் பொருள்கட்கு
ஒரு விருத்தம் புகுதாமல் குருகையர் கோன் உரைத்த
திருவிருத்தத்து ஓரடி கற்று இரீர் திருநாட்டகத்தே

**பொருள் -** கர்ப்பம் என்னும் வட்டவடிவில் உள்ள பள்ளத்தில் இருந்து வெளியே வந்த பின்னர் சிற்றின்பம் என்னும் கொடிய பள்ளத்தில் விழுகின்றீர்கள்; அதன் பின்னர் எதற்கும் உதவாத கிழட்டுத்தன்மை அடைந்த பின்னரும் உழன்று திரியும் மக்களே! ஜீவாத்மாவிற்கு எந்தவிதமான தவறான நடத்தைகளும் சேர்ந்து விடாதபடி (புருஷார்த்தங்களுக்கு எந்தவிதமான தடையும் ஏற்படாதபடி) திருக்குருகை என்ற நகரத்தில் உள்ளவர்களின் தலைவரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச்செய்த திருவிருத்தம் என்ற பிரபந்தத்தின் ஓர் அடியையாவது கற்றுக் கொள்வீராக! இதன் மூலம் பரமபதம் பெற்று இன்பமாக இருப்பீராக.

## ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யான ப்ரவேசம்

**மூலம் -** ஆழ்வாரை முக்தரென்பர்கள், சிலர்; அருளாளப்பெருமாளெம்பெருமானார் ஸ்ரீபாதத்தை ஆச்ரயித்தரொருவர், முக்தப்ராயரென்பர்; அங்குள்ளாரொருவரை நீர் போய்ப் பிறவுமென்னப் பிறந்தாரென்பார்கள், சிலர்; வங்கிப்புரத்துநம்பி, எம்பெருமான் தான் இப்படி வந்து அவதரித்தானென்பர். இப்படி சொல்லுகைக்கு

அடி, ஆழ்வாருடைய ப்ரபாவத்தாலே. முக்தரிலே ஒருவரை இங்கே போரவிட்டதாகில் நாம் போந்த கார்யமுடிந்தவாறே போகிறேமென்று ஆறியிருக்கக்கூடும்; அங்ஙனன்றியிலே, "இந்நின்ற நீர்மையினியாமுறாமை" என்றும், "பாவியேனைப் பல நீ காட்டிப்படுப்பாயோ" என்றும், "மாறி மாறிப் பலபிறப்பும்" என்றும், "முன்பரவை கடைந்தமுதங் கொண்ட மூர்த்தியோ" என்றுங் கூப்பிடுகையாலே, இவர் ஸம்ஸாரத்திலே ஒருவராமித்தனை; அராஜகமான தேசத்திலே ஆனையைக் கண்ணைக் கட்டிவிட்டால் ஆனையெடுத்தவன் ராஜாவாமாபோலே எம்பெருமான் கடாக்ஷித்தாரொருவராமித்தனை. சிரகாலஸாத்யமான கர்மத்தையுடையாரொருவர்க்குக் கடாக்ஷித்த அநந்தரம் இங்ஙனே ஆகக் கூடுமொவென்னில் "ப்ருந்தாவநம் பகவதா க்ருஷ்ணேநாக்லிஷ்ட கர்மணா, சுபேந மநஸா த்யாதம் கவாம் வ்ருத்திம் அபீப்ஸதா" என்கிறபடியே நெருஞ்சிற்காடாய்க் கிடந்த ஸ்ரீப்ருந்தாவநம் க்ருஷ்ணனுடைய வீக்ஷணத்திலே "உத்பந்ந நவசஷ்பாட்யம்" என்கிறபடியே சாணரைப்புல்லாய்ப் பசுகு பசுகென்று அறுக்க அறுக்கத் தொலையாதே கிடந்தாற்போறே, இவர்க்கும் இது கூடும்.

### ஸ்வாமி நம்பிள்ளை வ்யாக்யான ப்ரவேசம்

**மூலம்** - ஆழ்வார் முக்தரென்பர் சிலர். அருளாளப்பெருமாளெம்பெருமானார் ஸ்ரீபாதத்தை ஆச்ரயித்தார் ஒருத்தர் முக்தப்ராயர் என்பர். அங்குள்ளாரிலே ஒருவரை, "நீர் போய்ப் பிறவும்" என்னப் பிறந்தார் என்பார்கள் சிலர். வங்கிப்புத்து நம்பி எம்பெருமான்தானே வந்தவதரித்தான் என்பர். இப்படி சொல்லுகைக்கு அடி ஆழ்வாருடைய ப்ரபாவமிருக்கும்படி. முக்தரிலே ஒருவரை இங்கே போரவிட்டதாகில், நாம் போந்தகார்யம் முடிந்தவாறே போகிறோமென்று ஆறியிருக்கக்கூடும். அங்ஙனன்றியே, "இந்நின்றநீர்மையினியாமுறாமை" என்றும், "பாவியேனைப் பல நீ காட்டிப்படுப்பாயோ" என்றும், "மாறிமாறிப் பல பிறப்பும் பிறந்து" என்றும், "முன்பரவை கடைந்து அமுதம் கொண்ட மூர்த்தியோ" என்றும் கூப்பிடுகையாலே இவர் ஸம்ஸாரிகளிலே ஒருவராமித்தனை. அராஜகமான தேசத்திலே பட்டத்துக்குரிய யானையைக் கண்ணைக் கட்டி விட்டால், எடுத்து தன் கழுத்திலே வைத்துக் கொண்டவன் ராஜாவாமாப்போல எம்பெருமான் கடாக்ஷித்தாரொருவராமித்தனை ஆழ்வார். அநாதிகால ஸஞ்சிதமான கர்மத்தை உடையானொருவனுக்குக் கடாக்ஷித்தவநந்தரம் இங்ஙனேயாகக்கூடுமோ என்ன, "ப்ருந்தாவநம் பகவதா க்ருஷ்ணேநாக்லிஷ்ட கர்மணா, சுபேந மநஸா த்யாதம் கவாம் வ்ருத்திம் அபீப்ஸதா" என்கிறபடியே நெரிஞ்சிற்காடு க்ருஷ்ணனுடைய

வீக்ஷணத்தாலே ”உத்பந்ந நவசஷ்பாட்யம்” என்கிறபடியே சாண்சாணரைப் புல்லாய், பசுகு பசுகென்று அறுக்கறுக்கத் தொலையாதே கிடந்ததிறே, அப்படி, இவர்க்கும் கூடும்.

க்ஷோடச பதார்த்த ஜ்ஞாநத்தாலே நிச்ரேயஸம் என்பாரும், ஷட்பதார்த்த ஜ்ஞாநத்தாலே மோக்ஷம் என்பாருமாய், இங்ஙனே சில அர்த்தங்களைச் சொல்லாநிற்பர்கள் இதர வாதிகள். நம் பக்ஷத்தில் சிதசிதீச்வரர்கள் என்று தத்வம் மூன்றாய், அவற்றில் இரண்டு பரதந்த்ரமாய், ஒன்று ஸ்வதந்த்ரமாய், பரதந்த்ரமாகிறன சேதநாசேதநங்களாய், ஸ்வதந்த்ரனாகிறான் ஈச்வரனாய், இதில் சேதநனாகிறான் ஈச்வரன் கை பார்த்திருந்து தன் கார்யம் தலைக்கட்டிக் கொள்ளக்கடவனாய், அவனும் இவர் கார்யம் செய்து தலைக்கட்டிக் கொடுக்கக் கடவனாய், பின்னே அசிதம்சம் த்யாஜ்யமாகக் கடவதாய் இங்ஙனேயாயிற்று நம் தர்சநத்தில் நிர்ணயம். ஈச்வரனைக் குறித்துச் சில ஸாதநங்களை அநுஷ்டித்து அத்தாலே அவனைக் கொண்டு அபிமதங்களைப் பெறுவாரும் ஸ்வரூபஜ்ஞானத்தாலே அவன் தன்னையே பற்றிப் பெறுவாருமாய். இப்படி எல்லார்க்கு மொக்குமாயிற்று அவனாலே பேறு என்னுமது.

**விளக்கம்** – (இந்தப் பகுதியில் ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை மற்றும் ஸ்வாமி நம்பிள்ளை வ்யாக்யானங்களின் பொதுவான பகுதிகள் விளக்கப்படும்) ஸ்வாமி நம்மாழ்வாரை ஒரு சிலர் முக்தர் என்று கூறுவர்; ஸ்வாமி அருளாளப்பெருமாள் எம்பெருமானாரின் சீடர்களில் ஒருவர் நம்மாழ்வாரை முத்தப்ராயர் என்பார்; பரமபதத்தில் உள்ள எண்ணற்றவர்களில் ஒருவரை அழைத்து, “நீ சென்று உலகில் பிறந்து கரையேற்றுவாய்” என்று கூற, அவரே நம்மாழ்வார் என்று சிலர் கூறுவர். வங்கிப்புரத்துநம்பி கூறுவதாவது, “எம்பெருமானே ஆழ்வாராக அவதரித்தான்”, என்பதாகும். இப்படிப் பலவிதமாகக் கூறும் அளவிற்கு ஆழ்வாரின் மேன்மைகள் உள்ளன. முக்தர்களின் ஒருவர் இங்கு வந்து பிறந்திருந்தால் அவர், “நாம் இங்கு வந்து பிறந்துவிட்டோம். நமது குறிக்கோள் முடிந்தவுடன் சென்று விடுவோம். இடையில் இங்குள்ளவர்களுக்கு நாம் ஏன் நன்மைகளைச் செய்யவேண்டும்?”, என்று எண்ணி ஏதும் செய்யாமல் இருக்க வாய்ப்பு உண்டு. ஆனால்

- திருவிருத்தம் (1) – இந்நின்றநீர்மையினியாமுறாமை

- திருவாய்மொழி (6-9-9) – பாவியேனைப் பல நீ காட்டிப்படுப்பாயோ
- திருவாய்மொழி (2-6-8) - மாறிமாறிப் பல பிறப்பும் பிறந்து
- திருவாய்மொழி (7-1-10) - முன்பரவை கடைந்து அமுதம் கொண்ட மூர்த்தியோ

என்று பலவிதமாகப் புலம்பி அவனை அழைத்தபடி உள்ளதால் ஆழ்வார் ஸம்ஸாரிகளில் ஒருவரே ஆகிறார். அரசன் இல்லாத ஒரு நாட்டில் யானையின் துதிக்கையில் மாலையைக் கொடுக்க, அது யார் கழுத்தில் அந்த மாலையை இடுகிறதோ அவனே அரசனாகிறான்; அது போன்று எம்பெருமான் தேடிப் பிடித்துக் கடாக்ஷிக்கப்பட்டவர் ஸ்வாமி நம்மாழ்வார் ஆவார். இங்கு ஒரு கேள்வி – எல்லையற்ற காலம் கர்மத்தின் பிடியில் சிக்கி உழன்றபடி உள்ள ஒருவர் எம்பெருமானின் கடாக்ஷம் கிட்டப் பெற்ற உடனேயே இப்படி மாறக் கூடுமோ என்று கேட்கலாம். ஸ்ரீ விஷ்ணு புராணம (5-6-28) – ப்ருந்தாவநம் பகவதா க்ருஷ்ணேநாக்லிஷ்ட கர்மணா, சுபேந மநஸா த்யாதம் கவாம் வ்ருத்திம் அபீப்ஸதா – சிறந்த செயல்கள் செய்யவல்ல க்ருஷ்ணன் அவதரித்ததன் காரணமாக ப்ருந்தாவனம் புதுப்பொலிவு பெற்றது; அவனது திருவுள்ளம் காரணமாக பசுக்கள் விருத்தி அடைந்தன - என்பதற்கு ஏற்றபடி நெரிஞ்சிமுள் நிறைந்த காடாகக் கிடந்த அந்த ப்ருந்தாவனம் க்ருஷ்ணனின் கடாக்ஷம் காரணமாக, விஷ்ணு புராணம் (5-6-37) – உத்பந்ந நவசஷ்பாட்யம் - புதிய புற்கள் முளைத்து – என்பதற்கு ஏற்றாப்போல எங்கும் பசுமையாக அறுக்க அறுக்கக் குறையாமல் இருந்தது - என்று ஆனது அல்லவோ? இது போன்றே இவருக்கும் இந்த மாறுதல் உண்டானது.

**நம்பிள்ளை ஈடு விளக்கம்** – (இந்தப் பகுதியில் ஸ்வாமி நம்பிள்ளையின் ஈட்டில் உள்ள பகுதிகள் விளக்கப்படும்) பதினாறு தத்துவங்கள் குறித்த ஞானம் மூலமே மோக்ஷம் என்றும், ஆறு தத்துவங்கள் குறித்த ஞானம் மூலமே மோக்ஷம் என்றும், இப்படியாக ஏதும் சொல்லாமலும் பல வாதங்கள் உண்டு. நமது ஸித்தாந்தத்தில் சித், அசித் மற்றும் ஈச்வரன் என்று மூன்று தத்துவங்கள் உண்டு. இவற்றில் சித் மற்றும் அசித் ஆகிய இரண்டும் மற்ற ஏதோ ஒன்றுக்கு வசப்பட்டதாக (எம்பெருமானுக்கு), ஒன்று சுதந்திரமானதாக (எம்பெருமான்) உள்ளன. இவற்றில் மற்றதற்கு வசப்பட்டவை சித் மற்றும் அசித்; சுதந்திரமாக உள்ளவன் ஈச்வரன் ஆவான். இதில் சேதனன் என்பவன் ஈச்வரனை உபாயமாகப் பற்றிக் கொண்டு

தனது செயல்களை முடித்துக் கொள்கிறான். ஈச்வரனும் இவர்களின் செயல்களைச் செய்து கொடுக்கிறான். அசித் என்பது கைவிடத்தக்கதாக உள்ளது. இப்படியக நமது உடையவர் தர்சநம் உள்ளது. ஸர்வேச்வரனைக் குறித்து த்யானம் உள்ளிட்ட சாதனங்கள் மூலம் அவனைப் பற்றிக்கொண்டு, தங்களது விருப்பங்கள் கைகூடப் பெறுவார்கள் உண்டு. தங்களது ஆத்மாவின் ஸ்வரூப ஞானம் கைகூடப் பெற்று, ஸர்வேச்வரனையே பெற்றுவிடுபவர்களும் உண்டு. இப்படியாக அவனால் பேறு பெறுதல் என்பது எல்லாருக்கும் பொதுவாகவே உண்டு.

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்